SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
CENTRE FOR EXTERNAL DEGREES AND PROFESSIONAL LEARNING

# FINAL YEAR EXAMINATION IN BACHELOR OF BUSINESS ADMINISTRATION (EXTERNAL) – 2011/2012

HELD IN NOVEMBER / DECEMBER 2013

## BBA 37 (1) – கணக்காய்வு - I

நேரம்: 03 மணித்தியாலங்கள்
எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

---

### வினா இலக்கம் – 01

அ) நிதிக்கூற்றுக் கணக்காய்வு சூழலில் "உண்மையானதும், நேர்மை யானதுமான பார்வை (True and Fair View) என்பதிலிருந்து நீர் விளங்கி கொள்வது யாதென சுருக்கமாக விளக்குக.

(4 புள்ளிகள்)

ஆ) நீர் Maxiare கம்பனியின் கணக்காய்வுக்கு சிரேஸ்ட பொறுப்பாளராக உள்ளீர். இந் நிறுவனத்தின் முகாமை இயக்குணரான திரு. பைசால் என்பவர் சட்ட கணக்காய்வின் அடிப்படை நோக்கம் மோசடிகளையும், வழுக்களையும் இனங்காணுதல் என அறிவிக்கின்றார். திரு. பைசாலின் இக்கருத்துடன் நீர் உடன் படுகின்றீரா. உமது விடையினை நியாயப்படுத்துக.

(4 புள்ளிகள்)

இ) 1995 ம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் அதிகார சட்டத்திற்கிணங்க (Sri Lanka Accounting and Auditing Standards Act. No 15 of 1995) குறித்த வியாபார நிறுவனங்களினால் உடன்பட வேண்டிய இரண்டு தேவைப்பாடுகளைக் குறிப்பிடுக.

(3 புள்ளிகள்)

ஈ) "ஒரு கணகாய்வாளர் அவரால் ஒரு நிதிக்கூற்றில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் மீது ஒரு முழுமையான உறுதிப்பாட்டை வழங்க முடியாது" ஒரு கணக்காய்வாளர் தான் ஒரு நிதிக்கூற்றின் மீது மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் மீது ஒரு முழுமையான உறுதிப்பாட்டை ஏன் வழங்க முடியாதுள்ளது என்பதற்கான காரணங்கள் நான்கை (04) குறிப்பிடுக

(4 புள்ளிகள்)

உ) ஒரு கணக்காய்வாளர் அவர்களது பணியிணை மேற்கொள்ளும்போது கடைப்பிடிக்க வேண்டிய நான்கு ஒழுக்கவியல் கோட்பாடுகளைக் குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

(மொத்த புள்ளிகள்-17)

**வினா இலக்கம் - 02**

ஒரு கணக்காய்வாளர் கணக்காய்வு திட்டமிடல் படிமுறையில் உள்ளக கட்டுப்பாட்டினது முறைமையினை கற்பதோடு எதிர்பார்க்கப்பட்ட நோக்கெல்லையை மற்றும் கணக்காய்வு நடைமுறையினை விளக்குகின்ற ஒட்டுமொத்தமான கணக்காய்வு திட்டத்தினை விருத்தி செய்து ஆவணப்படுத்தவும் வேண்டும்.

அ) ஒரு நிறுவனத்தில் கணக்காய்வினை மேற்கொள்கையில் நிரந்தரமான கணக்காய்வு கோவை மற்றும் நடப்பு கணக்காய்வு கோவை (**Permanent and Temporary File**) என்பவற்றை விளக்குவதோடு அதன் உள்ளடக்கங்களயும் விளக்குக.

(5 புள்ளிகள்)

ஆ) கணக்காய்வு நோக்கல்லை (Audit Scope) மற்றும் அதன் வரையறைகள் என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது யாது என விளக்குக.

(3 புள்ளிகள்)

இ) கணக்கீட்டு முறைமையோடு தொடர்பு பட்டதான உள்ளக கட்டுபாட்டுகளை அமுல்படுத்தப்படுகின்ற போது முகாமையினால் எதிர்ப்பார்க்கப்படுகின்ற நோக்கங்கள் யாவை?

(3 புள்ளிகள்)

ஈ) உள்ளக கட்டுப்பாட்டு வரையறைகளோடு தொடர்பு பட்ட காரணிகள் (Limitation of Internal Control) ஐந்தினை (05) பட்டியல் படுத்துக,

(5 புள்ளிகள்)

(மொத்த புள்ளிகள்-16)

**வினா இலக்கம் - 03**

நீர் ஒரு பொறுப்பு வரையறுத்த பொதுக் கம்பனி ஒன்றின் 31 மார்ச் . 2012 ல் முடிவடைந்த ஆண்டுக்காண சட்டமுறைக் கணக்காய்வுக்காக சிரேஸ்ட கணக்காய்வாளராக ஈடுபட்டுள்ளீர். கணக்காய்வு திட்டமானது பெற வேண்டிய கணக்குகளை உறுதிப்படுத்துவதை பிரதான கணக்காய்வு நடைமுறையாகக் கொண்டு (Confirmation of Accounts Receivable) உமது பங்காளரினால் ஏற்பளிக்கப்பட்டுள்ளது (Approved). நீர் முக்கிய கடன் பட்டோர்களை பிரதிநிதிபடுத்தக் கூடிய வகையில் உரிய எழுமாற்று நுட்பத்தினை (Appropriate Sampling Technique) பயன்படுத்தி மாதிரி ஒன்றினை தெரிவு செய்துள்ளீர்.

அ) கடன்பட்டோர் மீதிகளை உறுதிப்படுத்த அழைப்பு விடுதலின் நோக்கங்கள் இரண்டினைக் (2) குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

ஆ) அத்தகைய கடன் பட்டோர் பதில் அளிக்காத சந்தர்ப்பங்களின் போது மேற்கொள்ளகூடிய மாற்றுக் கணக்காய்வு நடைமுறைகள் இரண்டிணைக் குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

இ) முகாமையானது குறிப்பிட்ட கடன் பட்டோர் மீதிகளை உறுதிபடுத்த அழைப்பு விடுக்க கூடாது என உம்மை வேண்டிக் கொண்டால், அத்தகைய

சந்தர்ப்பத்தின் போது நீர் கருத்தில் கொள்ள வேண்டிய விடயங்களைக் குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

ஈ) அக் கம்பனியின் கணக்காய்வு முடிந்து அறிக்கையும் வெளியிடப்பட்டதன் பிற்பாடு அந்த நிறுவனத்தின் முகாமையினால் விற்பனை மற்றும் கடன்பட்டோர் தொடர்பான ஒரு மோசடி கண்டுபிடிக்கப்பட்டது. அக்கம்பனியின் கடன் பட்டோர் மீதிகளை உறுதிப்படுத்தல் நடைமுறைகளையும் மற்றும் கணக்காய்வினையும் ஒரு கணக்காய்வாளராக நீர் மேட்கொண்டிள்ளீர். அத்தோடு அக் கம்பனியின் முகாமயானது இறுதி கடன் பட்டோர் மீதிகளை உறுதிப்படுத்தியதாக அறிக்கை ஒன்றை வழங்க உம்மைக் கோரி இருந்தது. இவ்வறிக்கையானது அவர்களால் தொடரப்படுகின்ற வழக்குக்கு ஆதாரமாக பயன்படுத்தப்பட உள்ளது.

அத்தகைய ஒரு கோரிக்கைக்கு எவ்வாறு நீர் **பதிலளிப்பீர்** என விளக்குக. உமது அறிக்கையில் நீர் குறிப்பட்ட ஏதாவது **வரையறையினை** குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

(மொத்த புள்ளிகள்-16)

**வினா இலக்கம் - 04**

BPMG & Co. ஆனது PAN Exports Ltd. இனது 2011/2012 முடிவடைந்த ஆண்டுக்காண கணக்குகளை கணக்காய்வு செய்வதற்க்காக நியமிக்கப்பட்டுள்ளது. BPMG & Co. யின் கணக்காய்வாளர்கள் கணக்காய்வினுடைய நேரமிடல், விசாலம் மற்றும் வழிகாட்டல் என்பவற்றை அமையப்பெற்றதாகவும் மற்றும் கணக்காய்வு திட்டத்தை விருத்தி செய்வதற்க்கான வழிகாட்டியாகவும் **ஒட்டுமொத்த தந்திரோபாயத்தினை** (Overall Audit Starategy) உருவாக்குதல் வேண்டும்.

அ) ஒட்டுமொத்த தந்திரோபாயத்தினை விருத்தி செய்வதில் கவனத்திற்கொள்ள வேண்டிய காரணிகள் மூன்றினை குறிப்பிடுக.

(3 புள்ளிகள்)

ஆ) ஒரு ஒழுங்காகன முறையில் விருத்தி செய்யப்பட்ட ஒட்டுமொத்த தந்திரோபாயத்தினை கொண்டிருப்பதனால் பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகள் நான்கினைக் (04) குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

இ) SLAuS 300 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வினைத் திட்டமிடலானது ஒரு கணக்காய்வு திட்டத்தில் கணக்காய்வாளர்களுக்கு உதவ வழிகாட்டுதலை வழங்குகிறது.
கணக்காய்வு திட்டமிடலின் நோக்கங்கள் (04) நான்கினைக் குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

ஈ) நீர் TMG (Pvt) Ltd ன் நிதிக் கூற்றுக்களை கணக்காய்வு செய்யும் கணக்காய்வு குழுவில் ஒரு உறுப்பினராக இருந்து கொண்டு மோட்டார் வாகனங்களை சரிபார்ப்பு (Verification) செய்வதற்கென ஒதுக்கப்பட்டுள்ளீர். நீர் அக்கம்பனியின் 31 டிசம்பர், 2012 ல் உள்ளவாறான ஐந்தொகையில் காணப்படும் மோட்டார் வாகனங்கள் சரிபார்ப்பு செய்கையில் நிறைவேற்றபட வேண்டிய முக்கியமான கணக்காய்வு நடைமுறைகள் நான்கினை (04) பட்டியல் படுத்துக,

(4 புள்ளிகள்)

(மொத்த புள்ளிகள்-15)

**வினா இலக்கம் - 05**

அ) ஒரு நிறுவனத்தின் வருடாந்த கணக்குகளின் மீதான கணக்காய்வாளர் அறிக்கையானது.நிதிக்கூற்றுக்களை ஒட்டு மொத்தமாக கவனத்திற்கொள்ளும்போது தெளிவான எழுத்து மூலமான அபிப்பிராயத்தின் வெளிப்பாட்டினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
கணக்காய்வு அறிக்கை ஒன்றின் அடிப்படை கூறுகளைக் (மூலகங்களை - Basic Elements) குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

ஆ) ஒரு கணக்காய்வாளர் எந்த சூழ்நிலையின் கீழ் நிதிக்கூற்றுக்களின் மீது பாதகமான அபிப்பிராயம் (Adverse Opinion) ஒன்றை தெரிவிப்பார் என சுருக்கமாக விளக்குக.

(3 புள்ளிகள்)

இ) நிதிக்கூற்றுக்களை கணக்காய்வு செய்கையில் ஒரு கணக்காய்வாளர் கணக்காய்வாளரது நியாயத்தில் (auditors' judgment) நிதி கூற்றுக்களின் மீது அல்லது பரிசோதனை மீது அல்லது கணக்காய்வு அறிக்கையில் ஒரு குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள், கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நடைமுறைகளை அடையாளம் கண்டு புரிந்து கொள்வதற்க்கு ஏதுவாக போதுமான வியாபார அறிவை (Knowledge of the Business) கொண்டிருத்தல் அல்லது பெறுதல் வேண்டும்.
ஒரு கணக்காய்வாளர் நிறுவனத்தினதும் மற்றும் தொழில் துறையினதும் அறிவினை (Knowledge of the entity and industry) பெறக்கூடிய நான்கு (04) மூலங்களை பட்டியல் படுத்துக.

(4 புள்ளிகள்)

ஈ நீர் Lanka Herbal (Pvt) Ltd நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களை கணக்காய்வு செய்யும் குழுவில் ஒரு அங்கத்தவராக உள்ளீர். இந் நிறுவனத்தின் சபைக் கூட்டறிக்கையை (Board Meeting Muinute) வாசிக்கையில் இக்கம்பனிக்கு எதிராக ஒரு வாடிக்கையாளர் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளதோடு, ஒரு பொருண்மை உரிமைக்கும் (Material Claim) கோரிக்கை விடுத்துள்ளது கண்டுபிடிக்கப்படுள்ளது. இக்கம்பனியானது நிதிக்கூற்றுக்களில் இது பற்றிய

வெளிப்படுத்தல்களையோ அல்லது ஏட்பாடுகளையோ (Pprovision) செய்திருக்கவில்லை. இது சந்பந்தமாக நீர் செய்ய வேண்டிய கணக்காய்வு நடைமுறைகளை குறிப்பிடுக.

(3 புள்ளிகள்)

உ) SLAuS 230 கணக்காய்வு ஆவணப்படுத்தலானது ஒரு நிதிக்கூற்றினது கணக்காய்வினது கணக்காய்வு ஆவணப்படுத்தலினை தயார் செய்வதில் கணக்காய்வாளரின் பொறுப்பை உறுதிப்படுத்திகிறது. கணக்காய்வாளரின் அபிப்பிராயத்திற்கு ஆதாரமான கணக்காய்வு சான்றுகளை வழங்குவதற்கும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டதற்கு சான்றுறுதி வழங்குவதற்கும் அவசியமான முக்கியமான விடயங்களை கணக்காய்வாளர் ஆவணப்டுத்தல் வேண்டும்.

கணக்காய்வு வேலையை ஆவணப்படுத்துதலின் நான்கு (4) நன்மைகளை குறிப்பிடுக.

(3 புள்ளிகள்)

(மொத்த புள்ளிகள்-17)

**வினா இலக்கம் - 06**

அ) நிதிக்கூற்றுக்களின் மீதான கணக்க்காய்வாளரின் அறிக்கையின் திகதி வரை செம்மையாக்கல் அல்லது வெளிப்படுத்தல் அவசியமாகும் சகல நிகழ்வுகளும் இனம் காணப்பட்டுள்ளன என்பதற்க்கு போதுமான பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளைப் பெறுவதற்கு அமைக்கப்பெற்ற நடைமுறைகளை கணக்காய்வாளர் மேற்கொள்ள வேண்டும்.

நிதிக்கூற்றுக்களின் செம்மையாக்கல் அல்லது வெளிப்படுத்தல் தேவைப்படுகின்ற பின்தொடரும் நிகழ்வுகளை (subsequent events) இனம் காண்பதற்கான கணக்காய்வு நடைமுறைகள் நான்கினை (04) பட்டியல் படுத்துக.

(4 புள்ளிகள்)

ஆ) SLAuS 530 கணகாய்வு மாதிரி எடுத்தல் மற்றும் ஏனைய பரீட்சிப்பு வழிமுறைகளானது (Audit Sampling and other Measure of Testing) கணக்காய்வு சான்றுகளை திரட்டுவதில் கணக்காய்வு நடைமுறைகளை அமைக்கும் போது கணக்காய்வு மாதிரி எடுத்தலினதும் மற்றும் ஏனைய வழிமுறைகளினதும் உபயோகம் பற்றிய வழிகாட்டுதல்களை வழங்குகின்றது.

மாதிரி தேர்வு முறைகள் (Methods of selecting a sample) மூன்றினை (03) அடையாளம் கண்டு விளக்குக.

(3 புள்ளிகள்)

இ) Royal Bakery (Pvt) Ltd ஆனது உணவு வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. இது ஒரு மைய வெதுப்பகத்தையும் (central bakery) மற்றும் 25 உணவு கடைகளையும் (Food outlets) கொழும்பு நகரில் கொண்டுள்ளது .இதன் கணக்கு பிரிவில் (Accounts

Department) ஒரு கணக்காளரும் (Accountant) மற்றும் நான்கு கணக்கு உதவியாளர்களும் (Accounts Assistants) உள்ளனர் உணவு கடைகளானது (food outlets) காலை 7 00.மணியில் இருந்து இரவு 9 00.மணி வரை திறந்திருக்கும். கணக்கு உதவியாளர்களில் ஒருவர் ஒவ்வொரு மறுநாளும் (Every other day) இவ் உணவு கடைகளுக்கு (food outlets) 1 மணிக்கு முன்னதாக சென்று உணவு கடைகளில் இருந்து பணத்தை வசூலித்து அதன் பின்னர் அப்பணத்தை வங்கிக்குச் சென்று வைப்புச் செய்கின்றார். இவ் வங்கிகள் ஆனவை 3. மணிக்கு முன்னதாக மூடப்படுகின்றன. அத்துடன் அவர் வங்கியில் வைப்பு செய்த வைப்பு சீட்டை (Deposit slips) அலுவலகத்திற்கு எடுத்துச் சென்று காசுப்புத்தகத்தில் (cash book) உள்ளிடுகின்றார் (enters). மாத இறுதியின் போது வங்கி கணக்கிணக்கம் (Bank Reconciliation) தயாரிக்கப்படுகின்றது.

Royal Bakery (Pvt) Ltd ன் விற்பனை மற்றும் காசு வசூலிப்பு தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையில் காணப்படுகின்ற முக்கியமான இரண்டு (2) பலவீனங்களை பட்டியல் படுத்தி, இவ் உள்ளக கட்டுப்பாட்டு முறையினை மேம்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை சுருக்கமாக குறிப்பிடுக.

(5 புள்ளிகள்)

ஈ) நீர் PC World (Pvt) Ltd கம்பனியின் 31 டிசம்பர், 2012 ல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களை கணக்காய்வு செய்யும் குழுவில் ஒரு அங்கத்தவராக உள்ளீர். இக் கம்பனியானது மடிக்கணனிகளையும் (Laptops) , அதன் உதிரிப்பாகங்களையும் விற்பனை செய்யும் பல நிலையங்களை நாடளாவிய ரீதியில் இயக்கி வருகின்றது. அத்தோடு இக்கம்பனியானது ஏனைய சில்லறை விற்பனையாளர்கள் ஊடாகவும் மடிக் கணணிகளை விநியோகின்றது. இக்கம்பனியானது தற்போது அறிமுகம் செய்யப்பட்ட நவீன தொழில் நுட்ப முறைகளைக் கொண்ட மடிக் கணணிகளினால் கவரப்பட்ட வாடிக்கையாளர்களின் உந்துதலினால் ஒரு புதிய வகை மடிக் கணணிகளை கொள்வனவு செய்ய வேண்டிய நிர்பந்தத்திக்கு உள்ளாகியுள்ளது. பழைய தொழில்நுட்பத்துடன் கூடிய மடிக்கணனிகள் கணிசமான அளவு கழிவுடன் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகின்றது.

மேற் குறிப்பிட்ட தகவல்களில் இருந்து கணக்காய்வின் போது விசேட கவனம் செலுத்தப்பட வேண்டிய (02) இரண்டு விடயப் பகுதிகளை இனங்காண்க. இவ்விரண்டு விடயப்பகுதிகளும் ஏன் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதையும் நியாயப்படுத்துக.

(5 புள்ளிகள்)

உ) 2007 ஆம் ஆண்டின் 07 ம் இலக்க கம்பனிச்சட்டத்தின் 157 (3) ம் பிரிவின் பிரகாரம் கம்பனி ஒன்றின் கணக்காய்வாளராக நியமிக்கப்பட முடியாத இரு நபர்களை பெயரிடுக.

(2 புள்ளிகள்)

(மொத்த புள்ளிகள்-19)